செ.வெ.எண்.453/2020 நாள்: 01.07.2020

**கன்னியாகுமரி மாவட்ட கோவிட்-19 கண்காணிப்பு அலுவலரும், தமிழ்நாடு பத்திரபதிவுத்துறை தலைவருமான திருமதி.பி.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், கன்னியாகுமரி மாவட்டத்தில், கொரோனா வைரஸ் தடுப்பு பணிகள் குறித்து பல்வேறு இடங்களில் ஆய்வு செய்தார்கள்.**

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு, கோவிட் -19 கண்காணிப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி.பி.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், இன்று (01.07.2020) கன்னியாகுமரி மாவட்டத்தில், கொரோனா வைரஸ் தடுப்பு பணிகள் குறித்து பல்வேறு இடங்களில் ஆய்வு செய்தார்கள்.

கன்னியாகுமரி மாவட்ட கோவிட்-19 கண்காணிப்பு அலுவலரும், தமிழ்நாடு பத்திர பதிவுத்துறை தலைவருமான திருமதி.பி.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்கள், இன்று கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகை தந்துள்ளார்கள். ஆரல்வாய்மொழி சோதனை சாவடியில், வெளிமாவட்டம் மற்றும் வெளி மாநிலங்களிலிருந்து, குமரி மாவட்டத்திற்கு வருகை தரும் பொதுமக்களுக்கு எடுக்கப்படும் கொரோனா வைரஸ் பரிசோதனைகள் மற்றும் அதன்தொடர் நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்ததோடு, தானும் வெப்பமாணி மூலம் பரிசோதனை மேற்கொண்டார்கள். சோதனை சாவடியில் சோதனைகள் முடிந்த பின், அவர்களை ஆரல்வாய்மொழி அறிஞர் அண்ணா கல்லூரிக்கு அழைத்துசென்று, அங்கு அவர்களுக்கு காய்ச்சல், சளி, இருமல் உள்ளிட்ட கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவது குறித்து, விளக்கமாக கேட்டறிந்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, தோவாளை சி.எஸ்.ஐ.பொறியியல் கல்லூரியில், ஈரான் நாட்டிலிருந்து வரும் குமரி மாவட்ட மீனவர்கள் தங்க வைக்கப்படுவதையொட்டி, அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு இருப்பதை நேரில் பார்வையிட்டு, கேட்டறிந்தார்கள். மேலும், அங்கு தங்கவைக்கபடும் மீனவர்களுக்கு தேவையான உணவு, முககவசங்கள், கிருமி நாசினிகள் வழங்கப்பட வேண்டும் என அங்குள்ள பொறுப்பு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

மேலும், தாழக்குடி பேரூராட்சிக்குட்பட்ட, சீதப்பாலிலுள்ள கட்டுப்படுத்தப்பட்ட பகுதிக்கு சென்ற கண்காணிப்பு அலுவலர் அவர்கள், அங்கு பொதுமக்களுக்கு தேவையான பால், உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் தடையின்றி கிடைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளை சுற்றி, அவ்வப்போது கிருமி நாசினிகள் தெளித்து, அப்பகுதி மக்களை கண்காணித்து, அவர்களுக்கு தேவையான மருத்துவ வசதிகள் ஏற்படுத்தி கொடுப்பதோடு, களப்பணியாளர்களும் முககவசங்கள், கையுறைகள் அணிந்து பாதுகாப்பான முறையில் பணியாற்ற வேண்டும் என அறிவுறுத்தினார்கள்.

அடுத்து, நாகர்கோவில், எஸ்.எல்.பி மேல்நிலைப் பள்ளியில், கொரோனா பராமரிப்பு மையத்தினை பார்வையிட்டு, அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள் குறித்து, கேட்டறிந்த, கண்காணிப்பு அலுவலர் அவர்கள் தொடர்ந்து, தக்கலை அரசு தலைமை மருத்துவமனையில், கொரோனா சிகிச்சை தனிமைப்படுத்தப்பட்ட பிரிவினை (Isolation Ward) பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள். மேலும், மாவட்ட ஆட்சியர் அலுவலக பேரிடர் மேலாண்மை அலுவலகத்தில் செயல்பட்டு வரும் கொரோனா தடுப்பு மையத்தின் மூலம், வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டவர்களை கண்காணித்து, அவர்களுடைய உடல் நிலையை கேட்டறிவது குறித்தும், கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளிலிருந்து கேட்கப்படும் உதவிகளுக்கு உரிய நடவடிக்கை எடுப்பது குறித்தும், வெளிமாவட்டம் மற்றும் மாநிலங்களிலிருந்து வருகைதரும் பொதுமக்கள் குறித்த தகவல்களை பெற்று, உரிய நடவடிக்கை எடுத்து வருவது, குறித்து கேட்டறிந்து, பதிவேடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

கண்காணிப்பு அலுவலர் திருமதி.பி.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், கோவிட்-19 தடுப்பு பணியில் ஈடுபட்டுள்ள அனைத்துத்துறை அலுவலர்களுடன் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில், தெரிவித்ததாவது: -

கன்னியாகுமரி மாவட்டத்தில், கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் தடுக்க அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கொரோனா வைரஸ் தடுப்பு பணிகளில் ஈடுபடும் பணியாளர்கள் முககவசம், கையுறைகள் அணிந்து பணியில் ஈடுபட வேண்டும். பொதுமக்கள் அனைவரும் கடைகளுக்கு செல்லும்போது, சமூக இடைவெளியினை பின்பற்ற வேண்டும், முககவசம் அணிய வேண்டும். அத்தியாவசிய பணிகள் அல்லாமல் வெளியே தேவையில்லாமல் செல்லக்கூடாது. குழந்தைகள் மற்றும் பெரியவர்களை பொதுஇடங்களுக்கு அனுப்பாமல் பாத்துக்கொள்ள வேண்டும்.

நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில், கொரோனா தடுப்பு பணிகளை நமது மாவட்டத்தில் சிறப்பாக செய்து வருவதற்காக, கண்காணிப்பு அலுவலர் திருமதி.பி.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே, இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் கொரோனா தடுப்பு பணிகளில் ஈடுபட்டு வரும் மருத்துவர்களையும், மருத்துவத்துறையை சார்ந்த செவிலியர்கள் உள்ளிட்ட சுகாதார பணியாளர்களை வெகுவாக பாராட்டினார்கள். மேலும், இப்பணிகளில் ஈடுபட்டுள்ள பிறதுறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் பணிகள் பாராட்டுக்குரியது என தெரிவித்தார்கள்.

முன்னதாக, தோவாளை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று, அங்கு நடைபெற்றுவரும் பத்திரப்பதிவு குறித்த விளக்கங்களை கேட்டறிந்து, பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.ரேவதி, நாகர்கோவில் மாநகராட்சி ஆணையாளர் திருமதி.ஆஷா அஜித், இ.ஆ.ப., சார் ஆட்சியர் (பத்மநாபபுரம்) திருமதி.ஷரண்யா அறி, இ.ஆ.ப., உதவி காவல் கண்காணிப்பாளர் திரு.கு.ஜவஹர், இ.கா.ப., மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) திரு.மா.வீராசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் (ஒழுங்குநடவடிக்கைகள், திருநெல்வேலி) திருமதி.மா.சுகன்யா, துணை ஆட்சியர் (பயிற்சி) மரு.க.பிர்தௌஸ் பாத்திமா, உதவி ஆட்சியர்(பயிற்சி) திரு.சி.எ.ரிஷாப், இ.ஆ.ப., நாகர்கோவில் கோட்டாட்சியர் திருமதி.அ.மயில் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டார்கள்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.